

பாடம் 9

ஆகஸ்ட் 24-30

# புதிய ஏற்பாட்டுச் சபையில் ஊழியம்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *அப் 2:42-47; 4:32-37; மத் 25:38,40; அப் 9:36; 2கொரி 8:7-15; ரோமர் 12; யாக் 2:1-9.*

**மனன வசனம்:** திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. யாக் 1:27.

மத் 28:18-20 வசனங்களை **மாபெரும் ஊழியக்கட்டளை** என்கிறோம். இதுவே நம் திருச்சபையின் ஊழிய வாசகம். சகலவித ஊழியப்பணிகளுக்கும் சுவிசேஷத் திட்டங்களுக்கும் இப்பகுதி ஊக்கம்தருகிறது. இந்த வசனங்கள் சொல்கிறபடி, கிறிஸ்தவர்கள் உலகெங்கும்சென்று சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள்; தனிப்பட்ட இழப்புகளைத் தாண்டியும் செல்கின்றனர்.

மாபெரும் ஊழியக்கட்டளையில் இயேசு சொன்னது என்ன? சீடர்களாக்குங்கள், ஞானஸ்நானம் கொடுங்கள், 'நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி' மக்களுக்குப் போதியுங்கள். மத் 28:20. எளிமையிலும், வேதனையிலும் இருப்பவர்கள்மேல் அக்கறைகாட்டுங்கள், தங்களைக் கவனித்துக்கொள்ள இயலாதவர்களைக் கவனியுங்கள் என்று இயேசு சொல்கிறார். முதல் சீடர்களுக்கு இயேசு கொடுத்த அறிவுரைகள் இவை. அதற்குமுன் அவர்கள் கேட்டிராத, கண்டிராத அறிவுரைகள் அல்ல; அவர்கள்மத்தியில் அந்த ஊழியப்பணியைத்தான் இயேசு ஏற்கனவே செய்துவந்தார். இயேசு போதித்த இந்த உண்மையை, இன்றைய சபைக் குடும்பத்தார் மாபெரும்ஊழியக்கட்டளையின் ஒருபகுதியாகநிறைவேற்றுவார்கள்.

*2019, ஆகஸ்ட் 31 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# புதியதொரு சமுதாயம்

இயேசு பரலோகம் சென்றபிறகு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. சபை உருவானது. இயேசுவைப் பின்பற்றுகிறவர்களின் புதிய சமுதாயம் அது. முதல் சீடர்கள் அதன் தலைவர்களாக இருந்தார்கள். அவர்களாகவே உருவாக்கிய சமுதாயம் அலல; இயேசுவினுடைய போதகம் மற்றும் ஊழியத்தின்மேல் கட்டப்பட்ட ஒரு குடும்பம்; எபிரெய வேதவாக்கியங்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் நீண்டகால வரலாற்றிலிருந்தும் வழிகாட்டலைப் பெற்றுக்கொண்டார்கள்.

**கேள்வி: ஆதிகாலச் சபைக் குடும்பத்தின் முக்கியக்கூறுகளாக பின்வரும் வசனங்களில் காணப்படுபவை என்ன? அப் 2:42-47; 4:32-37.**

சமுதாயத்தில் நியாயமும் தயவும் காணப்படுவதற்கான அடிப்படை நியதிகளை நிறைவேற்ற இஸ்ரவேலர்கள் தவறிவிட்டார்கள்; ஆனால், 'எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும்படியாக இப்படிச் செய்யவேண்டும்' என்கிற கட்டளைக்கு முற்றிலும் கீழ்ப்படிய ஆதிகாலச் சபையினர் தீவிரம்காட்டினார்கள். உபா 15:4. அதற்கு அத்தாட்சியாக, பொருள்களைப் பகிர்ந்தளித்தார்கள். நிலங்களை விற்றார்கள், நிதிதிரட்டுவதற்கு உதவினார்கள். அப் 4:34-5:2. அவ்வாறு சகவிசுவாசிகளின் தேவைகளைச் சந்தித்தார்கள், விசுவாசிகளல்லாதோருக்கும் சுகமாக்குதல் ஊழியத்தின் ஆசீர்வாதம் கிடைக்கச்செய்தார்கள். அப் 3:1-11; 5:12-16.

அதற்காக அப்புதிய சமுதாயத்தினரிடையே குறையில்லாமல் இல்லை. விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்தபோது, வளங்களை நிர்வகிப்பது கடினமானது; குறிப்பாக விதவைகளுக்கு தினமும் கொடுக்கப்பட்டு வந்த உணவு விநியோகத்தில் பிரச்சனை ஏற்பட்டது. அப் 6:1. முதல் தலைவர்களாக இருந்த சீடர்கள், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் கவனம்செலுத்த விரும்பினார்கள். எனவே, அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையில் சபையை ஒழுங்கமைக்கவேண்டியது அவசியமாயிற்று.

எனவே, அன்றாட விவகாரங்களை விசாரிப்பதற்கு ஏழு பேர் நியமிக்கப்பட்டார்கள். சபையில் வெவ்வேறு ஊழியங்களைச் செய்ய வெவ்வேறு திறமைகளுடையோர் அவசியமென்பதை முதன்முதலாக அப்போது அவர்கள் உணர்ந்திருக்கலாம். அதேசமயம் சபைவாழ்வுக்கும் சாட்சிக்கும் நடைமுறை ரீதியான ஊழியம் அவசியமென்பதை உணர்ந்திருப்பார்கள். 'மோசே மற்றும் தாவீதின் காலத்தில் தேவமக்கள் மத்தியில் இருந்த ஆட்சியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நியாயத்தின் அதே நியதிகளைத்தாம், சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக புதிதாக ஒழுங்கமைக்கப்பட்ட தேவசபையின் தலைவர்களும் பின்பற்ற வேண்டியிருந்தது.' - *EGW, AA, p 95.*

அன்றைய சபைச் சமுதாயம் எப்படிப்பட்டதாக இருந்திருக்குமென்று சற்றுச் சிந்தியுங்கள். அதே நியதிகளை இன்று நாம் எவ்வாறு வெளிப்படுத்தலாம்?

# தொற்காளின் ஊழியமும் சாட்சியும்

இயேசு முன்னுரைத்ததுபோல 'எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் சபை பெருக ஆரம்பித்தது.' அப் 1:8. விசுவாசத்தை ஏற்ற புது விசுவாசிகள் இயேசுவின் ஊழியத்தைச் செய்ய ஆரம்பித்தார்கள். யோப்பா பட்டணத்திலிருந்த தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்கிற பெண்ணும் இத்தகைய ஊழியத்தைச் செய்தாள். வஸ்திரமில்லாதோருக்கு வஸ்திரம்கொடுப்பது இயேசுவுக்கே கொடுப்பதாகுமென்கிற இயேசுவின் கட்டளையை அப்படியே பின்பற்றினாள். மத் 25:38,40.

**கேள்வி: தொற்காளையும் அவளுடைய ஊழியத்தையும்பற்றி அப் 9:36 சொல்வது என்ன? இதே வசனத்தில் உங்களைப்பற்றிச் சொல்லப்பட்டால், எவ்வாறு நீங்கள் விவரிக்கப்பட விரும்புகிறீர்கள்?**

தொற்காள் 'சீஷி' என்று அழைக்கப்படுகிறாள். அப் 9:36. அவளுடைய உண்மையும் உழைப்பும் பிறர்மேலான அக்கறையும் அவளுடைய பட்டணத்தைத் தாண்டி வெளியிலும் பரவின.

எதிர்பாராமல் ஒரு நாள் தொற்காள் மரிக்கிறாள். பக்கத்திலிருந்த லித்தா எனும் இடத்துக்கு பேதுரு வந்திருந்தபடியால், யோப்பாவுக்கு வரும்படி சிலர் அவரை அழைக்கிறார்கள். அப் 9:37-41. தொற்காளின் ஊழியத்தால் பயனடைந்த அநேக ஏழைமக்கள் அங்கே நிற்பதை பேதுரு பார்க்கிறார். அவள் செய்திருந்த வஸ்திரங்களைக் காட்டுகிறார்கள்; தங்களுக்கும் பிறருக்கும் அவள் செய்த பிற உதவிகளையும் அவர்கள் சொல்லியிருக்கக்கூடும்.

பேதுரு ஜெபித்தார். தேவன் அவளை உயிரோடு எழுப்பினார். ஆனாலும் பிறர்சேவையில் அர்ப்பணித்திருக்கிறவர்களுக்கு எல்லாமே நன்றாக நடக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. தொற்காள் வியாதிப்பட்டு, மரித்தாள்; சபையிலிருந்த விதவைகளுக்காக சேவை செய்ய நியமிக்கப்பட்ட ஏழு உதவிக்காரரில் ஒருவரான ஸ்தேவான், முதல் இரத்தசாட்சியாக மரித்தார். அப் 7:54-60. சேவைவாழ்க்கை சுமூகமான பாதையாக இருக்காது; கரடுமுரடான பாதைகளும் இருக்கும்.

தொற்காளின் வாழ்விலும் மரணத்திலும் இயேசுவின் அன்பும் வல்லமையும் வெளிப்பட்டது; யோப்பா மக்களின் வாழ்க்கையில் வலுவானதாக்கத்தை ஏற்படுத்த, தேவன் அவற்றைப் பயன்படுத்தினார்: 'இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.' அப் 9:42.

---

தொற்காளின் ஊழியம்தான் அவள் மரித்தபோது அவளுக்காக மக்களைத் துக்கப்படவைத்தது; ஒருவேளை நீங்கள் மரிக்கப்போகிறீர்களென்றால், அதுகுறித்து மக்கள் துக்கப்படுமளவிற்கு உங்களுடைய ஊழியம் இருக்கிறதா? ஊழியம்பற்றிய ஒரு நல்ல பாரம்பரியத்தை நாம் எவ்வாறு விட்டுச்செல்லலாம்? அங்கிகள், வஸ்திரங்கள் செய்கிற திறன் தொற்காளிடம் காணப்பட்டது. பிறருக்குச் சேவைசெய்யும்படி உங்களிடம் எப்படிப்பட்ட திறன்கள் காணப்படுகின்றன?

## பகிர்ந்தளிப்பதற்கான ஒரு வழிதான் கொடுப்பதாகும்

மனமாறிய பவுல் அப்போஸ்தலன், புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கத் துவங்கினார். தேவன் மிகுந்த வெற்றியைக் கொடுத்தார். ஆனால், யூதர்கள் சில பாரம்பரியங்களைப் பின்பற்றிவந்தார்கள். எனவே, புறஜாதியாரில் புதிதாக விசுவாசத்தை ஏற்றுக்கொண்டவர்களை எவ்வாறு நடத்துவதென்பதில் குழப்பம் ஏற்பட்டது. சிக்கலான இந்நிலைபற்றி விவாதிக்க தலைவர்கள் எருசலேமில் கூடினார்கள். அந்தக் கூடுகை, அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்பற்றி அப் 15 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தக்கூடுகை பற்றி கலா 2இல் பவுல் குறிப்பிடுகிறார். புறஜாதியார் மத்தியில் அவர் தொடர்ந்து ஊழியம்செய்வதற்கு எருசலேம் ஆலோசனைச் சங்கத்தின் அறிவுரைகளில் ஒரு முக்கியமான விஷயத்தைச் சுட்டிக்காட்டுகிறார்: ‘தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்.’ கலா 2:10.

தனிப்பட்ட விதத்திலும், ஊழியவாழ்க்கையிலும் இப்படிச் செய்ய பவுல் நோக்கமாயிருந்தார். அப் 20:35. எருசலேமிலிருந்த ஆதிகாலச் சபையைப்போல, கிறிஸ்தவ சமுதாயத்தினர் தங்கள் சகவிசுவாசிகளை அரவணைத்துக்கொள்ளவேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

**கேள்வி: சுவிசேஷத்திற்கும் தயாளகுணத்துக்கும் உள்ள தொடர்பு என்ன? 2கொரி 8:7-15.**

மோசமானநிலையிலிருக்கும்விசுவாசிகள்மேல்அக்கறைகாட்டி, தாராளமாகஉதவவேண்டியதைவலியுறுத்தஇரண்டுபழையஏற்பாட்டுப் பகுதிகளை பவுல் குறிப்பிடுகிறார். முதலாவது, தேவன் தயவாக அருளிய மன்னா. கொடுத்தலும் பகிர்தலும் சபையில் காணப்பட இச்சம்பவத்தை வைத்து வலியுறுத்துகிறார். 2கொரி 8:15. அடுத்து சங் 112:9ஐ மேற்கோள் காட்டுகிறார்: ‘வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான். அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.’ 2கொரி 9:9.

கொடுங்கள் என்று பவுல் சொல்கிறார். அதாவது, எருசலேமின் தரித்திரருக்காக காணிக்கை சேகரிக்கும்படி தானோ தீத்துவோ வரும்போது, கொடுப்பதில் சிக்கல் எழாமல் இருக்க, வாரம் ஒரு தொகையை அதற்கென ஒதுக்கிவைக்கச்சொல்கிறார். தாராளமாகக் கொடுத்த ஒரு சபையினரைச் சொல்லி, மற்ற சபையினரை ஊக்குவிக்கிறார்: ‘ நீங்கள் செய்யும் இச்சேவையானது உங்கள் விசுவாசத்திற்கான நல்ல சாட்சியாகும். இதற்காக மக்கள் தேவனைப் பாராட்டுவர். நீங்கள் விசுவாசிப்பதாக ஒத்துக்கொள்ளும் கிறிஸ்துவின் நற்செய்தியை நீங்கள் பின்பற்றுவதால் மக்கள் அவருக்கு நன்றி சொல்வார்கள். ஏனெனில் அவர்களின் தேவைகளிலும் ஒவ்வொருவரின் தேவைகளிலும் நீங்கள் தாராளமாகப் பங்கு கொள்கிறீர்கள்.’ 2கொரி 9:13. (பொதுமொழிபெயர்ப்பு.)

எவ்வளவோ தேவைகள் உள்ளன; எல்லாவற்றிற்கும் கொடுக்கமுடியாது. எவற்றுக்குக் கொடுக்கவேண்டும் என்று எவ்வாறு அறிந்துகொள்ளலாம்?

# வாழ்விலும் அன்பிலும் சிறக்க பவுலின் ஆலோசனைகள்

கிறிஸ்துவின் மரணத்தின்மூலம், விசுவாசத்தால் இரட்சிப்பு கிடைக்கிறது. இந்த மாபெரும் கோட்பாட்டை ரோமர் புத்தகம் ஆழமாக விவரிக்கிறது. 11 அதிகாரங்களுக்கு பிறகு, வேறொன்றை வலியுறுத்துகிறார். அதாவதும் வாழ்விலும் அன்புகாட்டுவதிலும் சிறந்தவர்களாக விளங்க வேண்டுமாம். அதற்கு அன்பும் கிருபையுமே அடிப்படை என்று இயேசுவின் வாழ்க்கையும் சுவிசேஷசம்பவங்களும் காட்டுகின்றன. 'அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.' ரோமர் 12:1. இயேசுவில் தேவன் நமக்காகச் செய்திருப்பவற்றின் அடிப்படையில் நம் வாழ்க்கை இவ்வாறு அமையவேண்டும்.

**கேள்வி: ரோமர் 12ஐ வாசியுங்கள். பிறர்மேல் குறிப்பாக, எளியவர்கள்மேல் அன்பும் அக்கறையும் காட்ட பவுல் கூறும் அறிவுரைகள் என்ன?**

பவுல் தன் பிற நிருப்பங்களில் விரிவாகப் பேசுபவற்றை ரோமர் 12இல் சுருக்கமாகச் சொல்கிறார். சபைக்குடும்பத்தார் பல்வேறு வரங்களையும் பொறுப்புகளையும் பெற்றிருக்கிறார்கள்; அவற்றில் பிறரை ஊக்குவிப்பதும், பிறருக்குச் சேவைசெய்வதும், தாராளமாகக் கொடுப்பதும் அடங்கும். ரோமர் 12:3-8. இவற்றையும் ஆர்வத்தோடும் அன்போடும் செய்வது மிகமுக்கியம். ரோமர் 12:9-11.

இப்படிப்பட்ட வாழ்க்கையை விவரிக்க, நடைமுறை வார்த்தைகளை பவுல் பயன்படுத்துகிறார். பிரச்சனைகள் மற்றும் உபத்திரவத்தில் பொறுமைகாக்கவும், எளியோர்மேல் அக்கறைகாட்டவும், முடிந்தவரையிலும் சமாதானம்பண்ணுகிறவர்களாகக் காணப்படவும், தீமையையும் அநியாயத்தையும் அன்போடு அணுகவும், தீமையை நன்மையால் வெல்லவும் விசுவாசிகளை வற்புறுத்துகிறார். ரோமர் 12:20,21.

புதுநபராக மாறி, தனிப்பட்ட வாழ்விலும், சபைவாழ்விலும் தேவனைச் சேவிக்கும்படி இந்த அதிகாரம் சொல்கிறது. புதுவிசுவாசிகள் தங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்து செய்திருப்பவற்றை நினைத்து, நித்தியவாழ்வின் நம்பிக்கையைப் பெற்று, தங்கள் வாழ்விலும் முன்னுரிமைகளிலும் செயல்களிலும் மாற்றம் காணவேண்டும். ரோமசாம்ராஜ்யத்தின், அடக்குமுறைக்கும் கொடுமைக்கும் அவர்கள் ஆளாகியிருந்த போதிலும், வித்தியாசமானவர்களாக வாழும்படி பவுல் அறிவுறுத்துகிறார். 'நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.' ரோமர் 12:2.

இயேசுவின் சீடர்களாக வாழ்விலும் அன்பிலும் நீங்கள் சிறந்திருக்க, உங்களுடைய மனநிலையிலும் நடவடிக்கைகளிலும் எப்படிப்பட்ட மாற்றம் ஏற்படவேண்டியுள்ளது?

## ‘நீதிமானாகிய’ யாக்கோபு

இயேசுவின் சகோதரன் அல்லது ஒன்றுவிட்ட சகோதரனாகிய யாக்கோபு ஆதிகாலச்சபைத்தலைவராகவும், எருசலேம் ஆலோசனைச் சங்கத்தலைவராகவும் இருந்ததாக கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். அப் 15; கலா 1,2. எனவே, வேதாகமத்தில் உள்ள யாக்கோபு நிருபத்தை எழுதியது அவராகத்தான் இருக்கவேண்டும்.

யாக்கோபு என்பது அக்காலத்தில் ஒரு பொதுப்பெயர். ஆனால் அப் போஸ்தலர் 15இல் வரும் அதே யாக்கோபுதான் கலா 1,2இலும் சொல்லப் படுகிறார் என்றால், ‘நீதிமானாகிய’ யாக்கோபு என்று குறிப்பிடப்படும் சபைத்தலைவரும் அவராகத்தான் இருக்கவேண்டும். பிறரை சரியாக நடத்தவேண்டும், புறக்கணிக்கப்பட்டோர்மேல் அக்கறைகாட்டவேண் டும் என்று அவர் வலியுறுத்துகிறார். தேவபிள்ளைகள் பக்தியாகவும், ஞானமாகவும் வாழ அவர் அறிவுறுத்துவதால், ‘புதிய ஏற்பாட்டின் நீதி மொழிகள் புத்தகம்’ என்றும் அவருடைய புத்தகம் அழைக்கப்படுகிறது.

‘நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிற வர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்’ என்று யாக்கோபு சொல்கிறார். யாக் 1:22. எளியவர்கள், சிறுமைப்பட்ட வர்கள்மேல் அக்கறைகாட்டுவதும், சமுதாயத்தின் சீர்கேடான செல் வாக்குகளுக்கு எதிர்த்து நிற்பதும்தான் சுத்தமான, தேவனுடைய பார் வையில் விலையேறப்பெற்ற பக்தியாக இருக்கிறதென்கிறார். யாக் 1:27.

**கேள்வி: பெரும்பாலான சமுதாயங்களில் செல்வந்தர்கள்பற்றி பொதுவாகக் காணப்படு கிற மனநிலையையும் யாக்கோபின் மனநிலையையும் ஒப்பிடுங்கள். யாக் 2:1-9; 5:1-5. சபைக்குடும்பத்திற்குள் ஏழைகளையும் ஐசுவரியவான்களையும் நடத்தவேண்டிய விதம்குறித்து அவர் கூறும் அறிவுரைகள் என்ன?**

ஒருவர் பசியிலும் குளிரிலும் வாடும்போது, “அவர் நன்றாக இருக்கவேண்டும், தேவ ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும்” என்று வெறுமனே நினைப்பதால் என்ன பயன்! ஒருவர்மேல் அதிகபட்ச அக்கறையை வெளிப்படுத்தலாம், அவர் நன்றாக இருக்க ஆசைப்பட லாம்; ஆனாலும் உணவும் உடையும் கொடுத்து உதவுவதுதான் அதிக பயனுள்ளதாக இருக்கும். யாக் 2:14-16. ஒருவருடைய விசுவாசத்திற் கும் கிரியைக்கும் உள்ள தொடர்பை இதை ஓர் உதாரணமாகச் சொல்லி விளக்குகிறார். ‘உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக’ என்று இயேசு சொன்னதை வலியுறுத்தி, அனுதின மும் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டுமெனக் காட்டுகிறார். இரட்சிப்பைச் சம்பாதிப்பதற்காக அல்ல, மெய்யான விசுவாசத்தின் வெளிப்பாடாக நாம் மற்றவர்களுக்கும் தேவனுக்கும் சேவைசெய்ய வேண்டும்.

நம்மை அறியாமலேயே நாம் ஏழைகளைவிட பணக்காரர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவிட வாய்ப்பிருக்கிறது; அது ஏன்?

# வெள்ளி ஆகஸ்ட் 30

## மேலும் படிக்க:

‘சோதிக்கப்படுகிற ஆத்துமாக்கள்மேல் அக்கறையுள்ள ஒரு சபையை நிறுவுவதற்காக விலையேறப்பெற்ற தம் உயிரையே இரட்சகர் கொடுத்தார். விசுவாசக் கூட்டத்தார் ஏழைகளாக, படிக்காதவர்களாக, அறியப்படாதவர்களாக இருக்கலாம்; ஆனாலும் கிறிஸ்துவுக்குள் அவர்கள் வீட்டிலும், அக்கம்பக்கத்திலும், சபையிலும், “அப்பாலுள்ள பகுதிகளிலும்” ஊழியம்செய்யலாம், அதன் விளைவுகள் நித்தியத் திற்கேதுவானவையாக இருக்கும்.’ *— EGW, DA, p 460.*

‘சுயநலமற்ற தாராளத்தன்மைதான் ஆதிகாலச்சபையை மகிழ்ச்சிமிக்கதாக்கியது; இருளிலுள்ளோருக்குச் சுவிசேஷச்செய்தியை அறிவிப்பதற்கு ஏதுவாக தங்களுடைய பிரயாசங்கள் இருந்ததை விசுவாசிகள் அறிந்திருந்தார்கள். தேவனுடைய கிருபையைதாங்கள் விருதாவாகப்பெறவில்லைஎன்பதற்கு அவர்களுடைய ஈகைக்குணம் சாட்சியாக இருந்தது. ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலில்லாமல் வேறு எது இந்தத் தாராளமனப்பான்மையைக் கொடுத்திருக்கும்? விசுவாசிகளின் கண்களுக்கும் அவிசுவாசிகளின் கண்களுக்கும் இது கிருபையின் ஓர் அற்புதமாக இருந்தது.’ *– EGW, AA, p 344.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *அப்போஸ்தலர் புத்தகத்தின் முதல் சில அதிகாரங்களில் சொல்லப்படுவது போன்ற சபையாக உங்கள் சபை மாற என்ன செய்யலாம்? சபையில் இந்த மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை சபைத் தலைவர்கள் மேற்கொள்ளலாம்?*

2 *காணிக்கையும் தசமபாகமும் உலகின் பல்வேறு பகுதிகளுக்கு எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்க, இந்த வாரப் பாடத்தின் சில நியதிகளை உலகளாவிய செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை பயன்படுத்துகிறது. உலகளாவிய அளவில் நிதியைப் பகிர்ந்தளிக்கும் முறையிலுள்ள பயன்கள் என்ன?*

3 *ரோமர் 12இன் அறிவுரைகள் சாத்தியமானவையா? நடைமுறைக்குரியவையா? ‘நிஜவாழ்வில்’ அவை பயன்தருமா? அல்லது, மங்கியகண்ணாடியில் தீட்டப்படும் ‘புனிதர்களின்’ படம்போன்று காட்சியளிக்கின்றனவா?*

4 *பழையஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் கடுமையான எச்சரிப்புகளைப்போலவே யாக் 5:1-5இன் எச்சரிப்புகளும் உள்ளன. இந்த எச்சரிப்புகள் சரியானவை, பொருத்தமானவை என்று எவ்வாறு அறிந்துகொள்ளலாம்?*

**பாடச்சுருக்கம்: இயேசுவின் ஊழியக்கட்டளையைப் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், சீடர்களும் ஆதிகால விசுவாசிகளும் எல்லா இடங்களுக்கும் சென்று நற்செய்தியை அறிவித்தார்கள், ஊழியப்பணியைச் செய்தார்கள். ஆதிகாலச் சபைக் குடும்பத்தார், சபைக்குள்ளும் வெளியிலும் இருந்த எளியவர்களுக்கு தங்களிடமுள்ளதைப் பகிர்ந்தளித்தார்கள். உண்மையுள்ளவர்களாக, எளியவர்களுக்குச் சேவைசெய்கிறவர்களாக வாழும்படி முதல் கிறிஸ்தவத் தலைவர்கள் விசுவாசிகளிடம் வலியுறுத்தினார்கள்; தாங்களும் அவ்வாறு வாழ்ந்துகாட்டினார்கள்.**